# நவோதய வித்யாலய சமிதி

**6-ஆம் வகுப்பில் சேர**
**2020-ஆம் ஆண்டின் ஜவஹர் நவோதய வித்யாலய தெரிவுநிலைத்**
**தேர்வுக்குரிய தகவல் குறிப்பேடு**

## நவோதய வித்யாலயா திட்டம்

### அறிமுகம்

இந்திய அரசு 1986 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையின்படி ஜவஹர் நவோதய வித்யாலயா என்று அழைக்கப்படுகின்ற பள்ளிகளைத் தொடங்கியது. இப்பொழுது இப்பள்ளிகள் 28 மாநிலங்களிலும் 7 யூனியன் பகுதிகளிலும் இயங்கிவருகின்றன. இவை அனைத்தும் இந்திய அரசின் நிதியுதவியைப் பெற்று நவோதய வித்யாலய சமிதி என்னும் தன்னாட்சி நிறுவனத்தின்கீழ் இயக்கப்படுகின்றது. இவை இருபாலரும் பயிலும் உறைவிடப் பள்ளிகளாகும். மாணவர் சேர்க்கை **ஜவஹர் நவோதய வித்யாலயத் தெரிவுநிலைத் தேர்வின்** மூலம் ஆறாம் வகுப்பில் சேர நடைபெறுகிறது. இப்பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிற்றுமொழி தாய்மொழி அல்லது மாநில மொழிகளாகும். அதன்பிறகு கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் ஆங்கிலம் வழியாகவும் சமுக அறிவியல் பாடங்கள் இந்தி அல்லது ஆங்கில மொழி வழியாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றன. நவோதய வித்யாலயப் பள்ளி மாணவர்கள் மைய இடைநிலைக் கல்வி வாரியம்(CBSE) நடத்தும் தேர்வுகளை எழுதுவர். இப்பள்ளிகளில் பயிலும் போது மாணவர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி அளிப்பதோடு அவர்களுக்குத் தேவையான உணவு, தங்கும் இடம், சீருடை, பாட நூல்கள் முதலியன இலவசமாக வழங்கப்படும். ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களிடமிருந்து மட்டும் குறைந்த கட்டணமாக மாதந்தோறும் ரூபாய் 600/- நவோதய விகாஸ்நிதி என்னும் பெயரில் வசூலிக்கப்படும். ஆனால், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பெண்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் இக்கட்டணத்ததைக் கட்ட வேண்டியதில்லை. அவர்களைத் தவிர மற்ற அல்லது அரசு ஊழியர்களின் பிள்ளைகளிடமிருந்து மாதந்தோறும் 1500/- ரூபாயையோ அல்லது அரசு ஊழியர்கள் தங்கள் நிறுவனத்தில் மாதம்தோறும் பெறுகின்ற குழந்தைகள் கல்வி உதவித்தொகையையோ அவற்றுள் எது குறைவானதோ அதைக் கட்டணமாக வசூலிக்கப்படும். மாதந்தோறும் வசூலிக்கப்படும் ஒவ்வொரு மாணவரின் விகாஸ்நிதி எக்காரணத்தைக்கொண்டும் ரூபாய் 600 க்குக் குறைவாக இருக்காது.

**இத்திட்டத்தின் நோக்கம்:**

i. திறமைவாய்ந்த குறிப்பாக கிராமப்புறத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு தரமான நவீன கல்வியை அளிப்பதோடு வளமான பண்பாடு மற்றும் மேலான நன்னெறிகள் புகட்டுதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அளித்தல், சாதனை மனப்பான்மையை வளர்த்தல் மற்றும் உடற்கல்வி அளித்தல்.

ii. மும்மொழிகளிலும் மாணவர்களுக்குத் தேவையான திறன்களை வளர்த்தல்

iii. இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து இந்தி பேசாத மாநிலத்திற்கும் மற்றும் மறுதலையாகவும் மாணவர்களை அனுப்பி பயிற்றுவிப்பதின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்த்தல்.

iv. பட்டறிவு மற்றும் வசதிகளை மற்ற பள்ளிகளுடன் பகிர்ந்தளித்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிக்கல்வியில் முன்மாதிரிப் பள்ளிகளாக விளங்கச் செய்தல்.

**1.1.மாநிலங்கள்தோறும் அமைந்துள்ள நவோதய வித்யாலயாக்கள்**

நவோதய வித்யாலயத் திட்டத்தின்படி மாவட்டந்தோறும் ஒரு ஜவஹர் நவோதய வித்யாலயா படிப்படியாக அமைக்கப்படவேண்டும். இப்பொழுது 28 மாநிலங்களிலும் 7 யூனியன் பகுதிகளிலும் (தமிழ் நாடு தவிர) 661 வித்யாலயாக்கள் அமைய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 636 வித்யாலயாக்கள் தற்பொழுது இயங்குகிவருகின்றன. மாநிலங்கள்வாரியாக ஒப்புதல் பெறப்பட்ட வித்யாலயாக்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆந்திர மாநிலம் | 13+02** | இமாச்சலப் பிரதேசம் | 12 | பஞ்சாப் | 22+01** |
| அஸ்ஸாம் | 27+01** | ஜம்மு காஷ்மீர் | 22+01** | புதுச்சேரி | 04 |
| அருணாசலப் பிரதேசம் | 18 | ஜார்கண்ட் | 24+02** | இராஜஸ்தான் | 33+02** |
| அந்தமான் நிக்கோபார் | 3 | கர்நாடகம் | 30+01** | சிக்கிம் | 04 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பீகார் | 38+01** | கேரளா | 14 | திரிபுரா | 08 |
| சண்டிகர் | 01 | லட்சத்தீவு | 01 | தெலுங்கானா | 09 |
| சத்தீஸ்கர் | 27+01** | மத்திய பிரதேசம் | 51+02** +01* | உத்திரப்பிரதேசம் | 75+01** |
| தில்லி | 09 | மகாராட்டிரம் | 33+01** | உத்திரகண்ட் | 13 |
| டாமன் மற்றும் டையு | 02 | மணிப்பூர் | 09+02** | மேற்கு வங்காளம் | 19+01** |
| தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி | 01 | மேகாலயா | 11+01** | மொத்தம் 638 + 22**+1* = 661 | |
| கோவா | 02 | மிசோராம் | 08 | | |
| குஜராத் | 33 +01** | நாகாலாந்து | 11 | | |
| ஆரியானா | 21 | ஒடிஸ்ஸா | 30+01** | | |

**தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பெருமளவில் உள்ள மாவட்டங்களில் கூடுதல் பள்ளிகள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. *தனிச்சிறப்பு நவோதய வித்யாலயா.**

ஒவ்வொரு வித்யாலயாவிலும் தெரிவுநிலைத் தேர்வின் வழியாக ஆறாம் வகுப்பில் தகுதியுள்ள 80 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். போதிய இடவசதி இல்லையென்றால் மாணவர் சேர்க்கையை 40 ஆகக் குறைக்கவோ அல்லது தெரிவுநிலைத் தேர்வின் முடிவை நிறுத்தி வைக்கவோ அல்லது மாணவர் சேர்க்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது தெரிவுநிலைத் தேர்வை நிறுத்தி வைக்கவோ நவோதய வித்யாலய சமிதிக்கு முழு உரிமை உண்டு.

## 1.2 ஜவஹர் நவோதய வித்யாலய தெரிவுநிலைத்தேர்வு - 2020

**2020 - 2021** கல்வியாண்டின் ஆறாம் வகுப்பு சேர்க்கைக்கான தெரிவுநிலைத் தேர்வு இரண்டு கட்டங்களாகப் பின்வரும் கால அட்டவணைப்படி நடத்தப்படும்.

**i. 11-01-2020 அன்று சனிக்கிழமை காலை 11:30 மணிக்குத் தேர்வு நடைபெறும் மாநிலங்கள் :**

ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம், அருணாச்சலப்பிரதேசம், (திபாங் பள்ளத்தாக்கு, தவாங் மாவட்டம் நீங்கலாக), பீகார், சத்தீஸ்கர், கோவா, குஜராத், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், (சம்பா, கின்னோர், மண்டி, சிர்மோர், குல்லு, லாஹூல் மற்றும் ஸ்பிதி, சிம்லா மாவட்டங்கள் நீங்கலாக), ஜார்க்கண்ட், கேரளா, கர்நாடகம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், மணிப்பூர், ஒரிசா, பஞ்சாப், இராஜஸ்தான், திரிபுரா, தெலுங்கானா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் (டார்ஜிலிங் நீங்கலாக), யூனியன் பிரதேசங்களான அந்தமான் நிக்கோபர் தீவுகள், சண்டிகர், தாதர் மற்றும் நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, டெல்லி, லட்சத்தீவுகள், புதுச்சேரி

**ii. 11-04-2020 அன்று சனிக்கிழமை காலை 11:30 மணிக்குத் தேர்வு நடைபெறும் மாநிலங்கள்:**

ஜம்மு மற்றும் காஷ்மீர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், உத்ராகண்ட், அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள திபாங் பள்ளத்தாக்கு மற்றும் தவாங் மாவட்டங்கள், இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள சம்பா, கின்னூர், மண்டி, சிர்மூர், குல்லு, லஹூல் மற்றும் ஸ்பிதி, சிம்லா, மாவட்டங்கள், மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் மாவட்டம்.

## இணையதளத்தின் வழியாக விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய இறுதி நாள் 15-09-2019

**ஜவஹர் நவோதய வித்யாலயத் தெரிவுநிலைத் தேர்வுக்கு எப்படி விண்ணப்பிக்கவேண்டும்?**

### 2.1 இணையதளத்தின் வழியாகத் தெரிவுநிலைத் தேர்வுக்குப் பதிவு செய்யும் முறை

(i) இணையத்தின் வழியாக இலவசமாகத் தெரிவுநிலைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முறை மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. **www.navodaya.gov.in** மற்றும் **www.nvsadmissionclassix.in** என்னும் இணையதளங்களில் உள்ள ஜவஹர் நவோதய

வித்யாலய சமிதி சேர்க்கை வலைவாசல் (Admission Portal) வழியாக இலவச விண்ணப்பங்களைப் பதிவு செய்யலாம். இருப்பிடம், வயது, தகுதி முதலானவற்றி முறையான ஆதாரங்கள் மற்றும் சான்றிதழ்கள் முதலானவை சரிபார்த் தேர்வுமுடிவுகள் அறிவித்த பிறகு வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு மட் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைப்படி நடைபெறும்.

(ii) தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தாங்கள் 5 ஆம் வகுப்பில் படிக்கும் பள்ளி தலைமையாசிரியரால் / பள்ளி முதல்வரால் வழங்கப்பட்ட, நிழற்படத்துடன் தங் கையொப்பமும் பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பமும் உள்ள சான்றிதழினை பதிவேற்றம் செய்ய வேண்டும். அப்பின்னிணைப்பு 10 முதல் 100 kb அளவு கொ jpg வடிவத்தில் பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

(iii) தேசிய திறந்தவெளிப் பள்ளிக்கல்வி மைய விண்ணப்பதாரர்கள் சான்றிதழினைப் பெறவேண்டும் மேலும் அவர் எந்த மாவட்டத்தில் உள்ள நவோத பள்ளியில் சேர விரும்புகிறாரோ அதே மாவட்டத்தைச் சேர்ந்த இடப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iv) இணையதளம் வெளிப்படைத் தன்மை கொண்டது மற்றும் இலவசமா அதனால் விண்ணப்பங்களை கணினி, மடிக்கணினி, செல்பேசி, வரைபட்டி (Tablet) முதலானவற்றின் வழியாகவும் பதிவேற்றம் செய்யலாம்.

(v) எல்லா நவோதயப் பள்ளிகளிலும் விண்ணப்பதாரர்களுக்கும்/பெற்றோர்களுக் இலவசமாக விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய உதவும் உதவிமையம் இருக் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுடன், தலைமையாசிரியர் கையொப்பம் இ சான்றிதழ், நிழற்படம், சரியான எண்ணுடைய கைப்பேசி ஆகியவற்றுடன் பள்ளி உள்ள உதவிமையத்தை அணுகலாம். பதிவு எண் மற்றும் கடவுச்சொல் குறுந்செய்திமூலம் பெற கைப்பேசி இருத்தல் இன்றியமையாததாகும்.

## 2.2 நுழைவுச்சீட்டு வழங்குதல்:

வலைவாசல் வழியாக 2020-ல் ஆறாம் வகுப்பில் சேருவதற்கான ஜவஹர் நவோ வித்யாலய தெரிவுநிலைத் தேர்வு நுழைவுச்சீட்டினைத் தேர்வுக்கு முன் விண்ணப்பதாரரோ அல்லது பெற்றோரோ, முதல்கட்டத்தேர்வு எழுதுவோர் 01-12-2 அன்றிலிருந்தும், இரண்டாவது கட்டத்தேர்வு எழுதுவோர் 01-03-2 அன்றிலிருந்தும் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

## 2.3 தெரிவுநிலைத்தேர்வின் தேர்வுமுடிவு:

**ஜவஹர் நவோதய வித்யாலயா தெரிவு நிலைத்தேர்வின்** முதல்கட்டத் தேர்வுமுடிவுக 2020 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதத்திலும், இரண்டாம் கட்டத்தேர்வு முடிவுகள் 2020 ஆம் ஆண்டின் மே மாதத்திலும் வெளியிடப்படலாம். விண்ணப்பதாரர் வலைவாசல் வழியாக தேர்வுமுடிவு மற்றும் சேர்க்கை விவரங்களை அறிந்துக்கொள்ளல மேலும் தேர்வு முடிவுகள் பின்வரும் தொடர்புடைய அலுவலங்களில் பார்வைக் வைக்கப்படும்.

i. ஜவஹர் நவோதய வித்யாலயா
ii. மாவட்டக் கல்வி அலுவலகம்
iii. மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
iv. துணை ஆணையர், நவோதய வித்யாலயா சமிதி, மண்டலம் அலுவலகங்கள்.
v. நவோதய வித்யாலய சமிதியின் www.navodaya.gov.in என்னும் வலைதளம்

அப்பகுதி ஜவஹர் நவோதய வித்யாலயாவின் பள்ளி முதல்வரும் விரைவு அஞ்சல் வழியாகவும் கைப்பேசியின் குறுஞ்செய்தி வழியாகவும் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரருக்குத் தெரியபடுத்துவார்.

# தெரிவுசெய்தலும் சேர்க்கையும்

3.1) தெரிவுநிலைத்தேர்வின் தேர்ச்சியை மட்டும் வைத்து நவோதய வித்யாலயாவில் சேர்வதற்கு விண்ணப்பதாரர் உரிமை கோர முடியாது. மாணவர் சேர்க்கையின் போது ஒவ்வொரு தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரரும் நவோதய வித்யாலயா சமிதியினரால் குறிப்பிடப்படும் தொடர்புடைய அனைத்துச் சான்றிதழ்களையும் அளிக்கவேண்டும். அதுவரை நுழைவுத்தேர்வின் தேர்ச்சி தற்காலிகமானதே. சான்றிதழ்களைச் சரிபார்த்துத் தொடர்புடைய நவோதய வித்யாலயா சேர்க்கையை உறுதி செய்த பின்னரே விண்ணப்பதாரர் தாம் படித்துவந்த பள்ளியில் மாற்றுச்சான்றிதழ்க்காக விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறோம்.

3.2) பள்ளிச் சேர்க்கையில் ஏதேனும் சிக்கல் இருப்பின் நவோதய வித்யாலயா சமிதியின் முடிவே இறுதியானது. விண்ணப்பதாரர் அதற்குக் கட்டுப்பட வேண்டியவர் ஆவார்.

3.3) நுழைவுத்தேர்வில் பங்கு பெற்ற விண்ணப்பதாரரின் (தேரிவு செய்யப்பட்ட மற்றும் தேரிவு செய்யப்படாத) மதிப்பெண்கள் அறிவிக்கப்படமாட்டா.

3.4) விடைத்தாள்கள் கணிப்பொறியின் வழியாக மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு துல்லியமாக மதிப்பிடப்பட்டு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுவதால் மறுமதிப்பீட்டிற்கோ மறுகூட்டலுக்கோ வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை.

3.5) பள்ளியில் சேர அனுமதி கிடைத்த மாணவர்கள் எட்டாம் வகுப்பு முடித்து ஒன்பதாம் வகுப்பிற்குத் தேர்ச்சி பெறும் போது இந்தி மொழி பேசும் மாநிலத்தில் உள்ள நவோதய வித்யாலயாவிற்கு இடப்பெயர்ச்சித்திட்டத்தின் வழியாக ஒரு கல்வி ஆண்டிற்குப் பள்ளி மாற்றம் செய்யப்படுவார்கள். அதே போல் இந்தி மொழி பேசும் மாநிலத்திலிருந்து இந்தி மொழி பேசாத மாநிலத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்பதை மாணவர், பெற்றோர்/பாதுகாவலர் ஆகியோர் கவனத்தில் கொள்ளவேண்டும். இடப்பெயர்ச்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் உடன்படவில்லையெனில், அம்மாணவர் / மாணவி அப்பள்ளியில் தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

3.6) நுழைவுத்தேர்வில் தேர்ச்சிப் பெற்ற விண்ணப்பதாரர் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது எந்த மாவட்டத்தில் உள்ள பள்ளியில் படித்து அந்த மாவட்டத்தில் உள்ள நவோதய வித்யாலயாவில் சேர, எந்த மாவட்டத்தில் நுழைவுத்தேர்வு எழுதினாரோ, அந்த மாவட்டத்தில் உள்ள ஜவஹர் நவோதய வித்யாலயாவில் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார். எக்காரணத்திற்காகவும் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர், தாம் தேர்வு எழுதிய மாவட்டத்தில் உள்ள ஜவஹர் நவோதய வித்யாலயாவைத்தவிர, வேறு எந்த மாவட்டத்திலுமுள்ள ஜவஹர் நவோதய வித்யாலயாவில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என்பதை விண்ணப்பதாரர், பெற்றோர்/பாதுகாவலர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். பயிற்று மொழி, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வேறுமாவட்டம் அல்லது வேறுமாநில இடமாற்றம் போன்ற காரணங்களுக்காகத் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் பள்ளி மாற்றத்திற்கான வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.7) தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவுநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் தங்களின் இனச்சான்றிதழை உரிய அலுவலரிடமிருந்து பெற்று ஒப்படைக்க வேண்டும். இந்தச் சான்றிதழ் சேர்க்கை நடைபெறும் கல்வியாண்டின் **மார்ச்சு மாதம் 30 ஆம்** தேதிக்கு முன்னால் பெறப்பட்டதாக இருக்க வேண்டும். அச்சான்றிதழைப் பள்ளியில் சேரும்போது ஜவஹர் நவோதய வித்யாலயா முதல்வரிடம் அளிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 2020-2021 ஆம் கல்வியாண்டில் விண்ணப்பதாரர் பள்ளியில் சேர விரும்பினால் அந்தச் சான்றிதழினை 2020 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதம் 30 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பெற்றிருக்க வேண்டும்.

3.8) கிராமப்புற ஒதுக்கீட்டில் சேர விரும்பும் விண்ணப்பதாரர், அவர் 3, 4, 5 ஆம் வகுப்புகளில் படித்த பள்ளி அதே கிராமபுறத்தைச் சார்ந்ததாக இருக்கின்ற சான்றிதழினை அளிக்க வேண்டும்.

3.9) மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் (உடல், காது, கண், முதலிய பாகங்கள் ஊனமடைந்தவர்கள்) தேர்ச்சி பெற்றால் தங்கள் மாவட்ட முதன்மை மருத்துவ அலுவலரால் கையொப்பம் இடப்பட்ட உரிய உடல் ஊனச் சான்றிதழைப் பள்ளிச் சேர்க்கையின் போது ஒப்படைக்க வேண்டும்.

3.10) மாற்றுப்பாலின (Transgender Category) வகுப்பைச் சேர்ந்தவர்கள், அவர்கள் மூன்றாம் பாலினத்தை சேர்ந்தவர்கள் என்பதற்கான சான்றிதழை அந்த மாநிலத்திலுள்ள அச்சான்றிதழை வழங்கும் உரிய அரசு அலுவலரிடமிருந்து பெற்றுப் பள்ளியில் சேர்க்கையின்போது ஒப்படைக்க வேண்டும். அவர்களுக்கென்று எந்தவிதமான தனி இடஒதுக்கீடும் இல்லை.

# தகுதியுடையவர் யார்?

**அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும்**

4.1) ஜவஹர் நவோதய வித்யாலயா அமைந்துள்ள மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் மட்டுமே அப்பள்ளிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவார். நவோதய வித்யாலயா அமைக்கப்பட்ட பிறகு அந்த மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்குமாயின், புதியதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டத்தில் நவோதய வித்யாலயா இன்னும் அமைக்கப்படவில்லையெனில் புதிய மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரரும், பிரிப்பதற்கு முன் இருந்த மாவட்டத்தில் உள்ள நவோதய வித்யாலயாவில் சேரத் தகுதி உடையவர் ஆவார்.

4.2) வித்யாலயாவில் சேர விரும்பும் விண்ணப்பதாரர் **01-05-2007 -க்கு முன்பு பிறந்தவராகவும் 30-04-2011-க்குப் பிறகு பிறந்தவராகவும் (இரண்டு நாட்களும் இதில் அடங்கும்) இருக்கக்கூடாது.** இவ்விதி தாழ்த்தப்பட்டோர், பழங்குடி இனத்தவர் உள்ளிட்ட அனைத்து பிரிவினருக்கும் பொருந்தும். விண்ணப்பதாரரின் வயது சான்றிதழில் உள்ள வயதைவிட அதிகமாக இருக்கலாம் என்ற ஐயம் ஏற்படுமானால், விண்ணப்பதாரரின் வயது மருத்துவக் குழுவின் பரிசீலனைக்குப் பரிந்துரைக்கப்படும். அதன் தீர்ப்பே இறுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

4.3) தெரிவுநிலைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் **2019-2020** ஆம் கல்வியாண்டு முழுவதும் எந்த மாவட்டத்தில் உள்ள நவோதய வித்யாலயாவில் சேர விரும்புகிறாரோ அந்த மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு நிதியுதவிப்பள்ளி / அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிப்பவராகவோ அல்லது தேசிய திறந்தவெளிப் பள்ளியின் "B" தகுதிச் சான்றிதழ் பெற அம்மாவட்டத்தில் படிப்பவராகவோ இருத்தல் வேண்டும். அப்பள்ளிகள் அரசாங்கத்தால் அல்லது அரசு ஒப்புதல் பெற்ற முகவர்களால் (Agency) ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவை ஒப்புதல் பெற்ற பள்ளிகளாகக் கருதப்படும். தேசிய திறந்தவெளிப் பள்ளியில் "B" தகுதிச்சான்றிதழ் பெற்றவர் படித்த பள்ளியானது அந்த நிறுவனத்தின் (NIOS ) ஒப்புதல் பெற்றதாக இருத்தல் இன்றியமையாதது. விண்ணப்பதாரர் **2019-2020** ஆம் கல்வியாண்டில் ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே **2020-2021** ஆம் கல்வியாண்டில் 6 ஆம் வகுப்பில் படிக்க ஜவஹர் நவோதய வித்யாலயாவில் சேர்த்துக்கொள்ளப்படுவார்.

4.4) கிராமப்புற ஒதுக்கீட்டில் சேர விரும்பும் விண்ணப்பதாரர் முறையே 3,4 மற்றும் 5ஆம் வகுப்புகளை எவ்வித இடைவெளியுமின்றி முழுஆண்டும் அரசுப் பள்ளி/ அரசுஉதவிப் பள்ளி/அரசின் அங்கீகாரம் பெற்ற **<u>கிராமப்புறத்துப் பள்ளிகளில்</u>** படித்துத் தேர்ச்சி பெற்றிருத்தல் இன்றியமையாதது.

4.5) தேசிய திறந்தவெளி பள்ளியில் சிறப்புப் பாடத்திட்டத்தின்கீழ் "B" தகுதிச்சான்றிதழை **2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **30** ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பெறும் நிலையிலுள்ள, குறிப்பிட்ட வயது வரம்பிற்கு உட்பட்ட மாணவர்கள் இந்த நவோதய தெரிவுநிலைத்தேர்வு எழுதத் தகுதிப்பெற்றவர்கள் ஆவார்கள். அம்மாணவர்களது கிராமப்புறத் தகுதி தாசில்தார்/மாவட்ட ஆட்சியர் அவர்களால் அம்மாணவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து கிராமப்புறத்தில்தான் வசிக்கிறார்கள் என்று உறுதி செய்யப்பட்ட இருப்பிடச் சான்றிதழை வைத்து முடிவு செய்யப்படும். மேற்கண்ட பாடத்திட்டத்தில் படிக்கும் நகர்ப்புற மற்றும் நகர்புறமாக அறிவிக்கப்பட்ட மாணவர்கள் கிராமப்புற ஒதுக்கீடு பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

4.6) **15.09.2019** தேதிக்குமுன் ஐந்தாம் வகுப்பிற்குத் தேர்ச்சிபெறாமலும் பள்ளியில் சேர்க்கப்படாமலும் இருந்தால் அந்த விண்ணப்பதாரரும் விண்ணப்பம் செய்ய தகுதியற்றவராவார்.

4.7) எந்த ஒரு சூழ்நிலையிலும் எந்த விண்ணப்பதாரரும் இரண்டாவது முறையாகச் சேர்க்கைக்கான தேர்வு எழுதத் தகுதியற்றவர் ஆவார்.

## கிராமப்புற விண்ணப்பதாரர்களுக்கு

A) குறைந்த அளவு 75% இடங்கள் கிராமப்புறப் பகுதியில் இருப்பவரைக் கொண்டும் எஞ்சிய இடங்கள் அதே மாவட்டத்தில் உள்ள நகர்ப்புறத்தில் இருப்பவர்களைக் கொண்டும் நிரப்பப்படும்.

B) கிராமப்புறத்திற்கென ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கைக்கு விண்ணப்பிப்பவர் கண்டிப்பாக 3,4,5-ஆம் வகுப்புகளைக் கல்வியாண்டு முழுவதும் கிராமப்புறத்தில் உள்ள அரசுப்பள்ளி/அரசுநிதியுதவிப்பள்ளி /அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். எனினும் விண்ணப்பதாரர் சேர்க்கையை விரும்பும் மாவட்டத்திலேயே 5 ஆம் வகுப்பு முழுவதும் படித்தவராக இருத்தல்வேண்டும்.

C) தேசியத் திறந்தவெளிப் பள்ளிப் பாடத்திட்டத்தின் கீழ் பயிலும் விண்ணப்பதாரர் மாவட்ட ஆட்சியர்/ தாசில்தார் / வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கக்கூடிய கிராமப்புற சான்றிதழைத் தர வேண்டும்.

## நகர்ப்புற விண்ணப்பதாரர்களுக்கு

3,4,5 வகுப்புகளுள் ஏதேனும் ஒரு வகுப்பில் நகர்ப்புறப் பள்ளியில் ஒரு நாள் படித்திருந்தால் கூட அந்த விண்ணப்பதாரர் நகர்ப்புற விண்ணப்பதாரராகவே கருதப்படுவார். **2011ஆம்** ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி அல்லது பின்னர் ஓர் அரசு அறிக்கையின்படி நகர்ப்புறமாக வரையறை செய்யப்பட்டவை மட்டும் நகர்ப்புறம் என்றும் மற்ற இடங்கள் அனைத்தும் கிராமப்புறம் என்றும் கருதப்படும்.

## மாற்றுப் பாலினத்தவருக்கு (Transgender)

மாற்றுப் பாலினத்தவருக்கென்று எந்த ஒரு தனிப்பட்ட இட ஒதுக்கீடும் இல்லை. அவர்கள் (ஆண்) மாணவர்களாகவே கருதப்பட்டு ஆண் மாணவருகளுக்குரிய கிராமப்புறம் / நகர்புறம் / தாழ்த்தப்பட்டவர் / பழங்குடியினர் / மாற்றுத்திறனாளிகளுக்குரிய இட ஒதுக்கீட்டினை மட்டுமே பெறுவர்.

## <u>இடஒதுக்கீடு</u>

a. குறைந்தது 75% இடங்கள் அம்மாவட்டத்தில் உள்ள கிராமப்புறப்பகுதியில் படிக்கும் மாணவர்களைக் கொண்டும் எஞ்சிய இடங்கள் நகர்ப்புற மாணவர்களைக் கொண்டும் நிரப்பப்படும்.

b. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு அம்மாவட்டத்தின் மக்கள் தொகையில் அவர்களின் சதவிகித அடிப்படையில் இடஒதுக்கீடு அளிக்கப்படும். இவ்வொதுக்கீடு, தேசிய ஒதுக்கீட்டுச் சராசரியின் அளவை விட (15% தாழ்த்தப்பட்டோர், 7.5% பழங்குடியினர்) எந்த மாவட்டத்திலும் குறைவாக இருக்காது. ஆனால் இவ்விரு இனத்தோருக்கான மொத்த ஒதுக்கீடு 50% வரை மட்டுமே அமையும். மேலும் இவ்வொதுக்கீடு உள்மாற்றத்திற்கு உட்பட்டது. பொது ஒதுக்கீட்டில் தேர்வு பெறும் இவ்வினத்தவர் இவ்வொதுக்கீட்டின் கீழ் எடுத்துக் கொள்ளப்படமாட்டார்.

c. மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

d. இட ஒதுக்கீடு **மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு (உடல், காது, கண் குறைபாடு உள்ளவர்கள்) இந்திய அரசின் விதிகளின்படி ஒதுக்கப்பட்டுள்ளது.

** **கண்பார்வை இல்லாதவர்கள் என்போர்:**

i. கண்பார்வை முழுவதுமாக இல்லாதவர்கள் (அல்லது)

ii. கண்பார்வை 6/60 (அல்லது) 20/200 வரை (SNELLEN) கண்ணாடி அணிந்தும் மிகாதவர்கள் (அல்லது)

iii. கண்பார்வை 20 டிகிரி (அல்லது) அதைவிட மோசமாக உள்ளவர்கள்.

** **காது கேளாதவர்கள் என்போர்:**
60 டெசிபிள்கள் வரை (அல்லது) அதிகமாக உள்ளவர்கள்

** **லோகோமோட்டார் ஊனம் என்பது:**
மூட்டு எலும்புகள் (அல்லது) தசைநார்கள் மூலமாக ஊனம் அடைந்தவர்கள் (அல்லது) மூளை நரம்புகள் மூலம் ஊனம் அடைந்தவர்கள்

** **உடல் ஊனம்**
மருத்துவ அலுவலரின் சான்றிதழ்படி, குறைந்தபட்சம் 40% அல்லது அதற்கும் மேலாக உடல் ஊனம் உள்ளவர்கள் ஊனமுற்றவராகக் கருதப்படுவர்.

## தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அளிக்க வேண்டிய சான்றிதழ்கள்

**தற்காலிகமாக சேர்க்கைக்குத் தெரிவுநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் பின்வரும் சான்றிதழ்களைச் சேர்க்கையின்போது சரிபார்க்க அளிக்க வேண்டும்.**

i) பிறந்ததேதிக்கான ஆதாரம் உள்ள சான்றிதழ்.
ii) நவோதய வித்யாலய சமிதியின் விதிகளின்படி தகுதிக்கான ஆதாரச் சான்றிதழ்.
iii) கிராமப்புற ஒதுக்கீட்டில் சேர விரும்பும் மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர் படிக்கும் பள்ளி இருக்கும் இடம் அரசாணையால் உறுதி செய்யப்பட்ட கிராமப்புறப் பகுதியென்று உறுதியளிக்கும் சான்றிதழ் அளிக்க வேண்டும்.
iv) திறந்தவெளிப் பள்ளியில் படித்த மாணவராய் இருப்பின் உரிய படிவத்தில் அமைந்த இருப்பிடச் சான்றிதழ்.
v) தேவையான மற்ற பிற சான்றிதழ்கள்.

## தெரிவுநிலைத்தேர்வு பற்றி

1. **தேர்வு மையம்**
நுழைவுச்சீட்டில் குறிக்கப்பட்டுள்ள தேர்வுமையத்தில் மட்டுமே ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தேர்வு எழுத வேண்டும். வேறு எந்த மையத்திலும் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார். தேர்வு மையம் மாற்றம் தொடர்பாக எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியான நுழைவுச்சீட்டு இல்லாதவர்கள் தெரிவுநிலைதேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். நுழைவுச்சீட்டினை நவோதய வித்யாலய சமிதி தலைமையகத்தின் **www.navodaya.gov.in அல்லது சேர்க்கை வலைவாசல்** என்னும் இணையதளத்தின் வழியாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

2. **தேர்வு எழுதும் மொழி**
ஜவஹர் நவோதய வித்யாலயாவின் தெரிவுநிலைத்தேர்வு மாநிலங்கள்தோறும் பின்வரும் பல்வேறு மொழிகளில் நடத்தப்படுகின்றன.

| மாநிலத்தின் பெயர் | மொழிகள் |
|---|---|
| அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் | இந்தி, ஆங்கிலம், தமிழ், உருது. வங்காளம் |
| ஆந்திரப்பிரதேசம் | இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, மராத்தி, உருது, ஒரியா, கன்னடம் |
| அருணாசலப்பிரதேசம் | ஆங்கிலம், இந்தி |
| அஸ்ஸாம் | ஆங்கிலம், இந்தி, அஸ்ஸாமி, போடோ, காரோ, வங்காளம், மணிப்புரி (வங்காள எழுத்துரு), மணிப்புரி (மீதெய் மயக் எழுத்துரு) |
| பீகார் | ஆங்கிலம், இந்தி, உருது |
| சண்டிகர் | ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி |
| சத்தீஸ்கர் | ஆங்கிலம், இந்தி |
| தில்லி | ஆங்கிலம், இந்தி |
| கோவா | ஆங்கிலம், இந்தி, மராத்தி, கன்னடம் |
| குஜராத் | ஆங்கிலம், இந்தி, குஜராத்தி, மராத்தி |
| ஹரியானா | ஆங்கிலம், இந்தி |
| இமாச்சல் பிரதேசம் | ஆங்கிலம், இந்தி |
| ஜம்மு மற்றும் காஷ்மீர் | ஆங்கிலம், இந்தி, உருது |
| ஜார்கண்ட் | ஆங்கிலம், இந்தி, உருது, ஒரியா |
| கர்நாடகா | இந்தி, ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மராத்தி. உருது, மலையாளம், தமிழ் |
| கேரளா | இந்தி, ஆங்கிலம், மலையாளம், தமிழ், கன்னடம் |

| | |
|---|---|
| இலட்சத்தீவு | இந்தி, ஆங்கிலம், மலையாளம் |
| மத்தியப்பிரதேசம் | ஆங்கிலம், இந்தி, உருது, மராத்தி, குஜராத்தி |
| மகாராஷ்டிரம் | ஆங்கிலம், இந்தி, கன்னடம், மராத்தி, உருது, தெலுங்கு, குஜராத்தி |
| மணிப்பூர் | ஆங்கிலம், இந்தி, மணிப்புரி (மீதெய் மயக்), |
| மேகாலயா | ஆங்கிலம், இந்தி, காசி, காரோ, வங்காளம், அஸ்ஸாமி |
| மிஜோராம் | ஆங்கிலம், இந்தி, மிஜோ |
| நாகாலாந்து | ஆங்கிலம், இந்தி, |
| ஒடிசா | ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, ஒரியா, உருது |
| புதுச்சேரி | ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி |
| பஞ்சாப் | ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி |
| இராஜஸ்தான் | ஆங்கிலம், இந்தி |
| சிக்கிம் | ஆங்கிலம், இந்தி, நேபாளி |
| தெலுங்கானா | இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மராத்தி, உருது |
| திரிபுரா | ஆங்கிலம், இந்தி, வங்காளம் |
| டாமன் மற்றும் டையு (U.T) | ஆங்கிலம், இந்தி, குஜராத்தி |
| தாதர் மற்றும் நாகர் ஹவேலி (U.T) | ஆங்கிலம், இந்தி, குஜராத்தி, மராத்தி |
| உத்திரப்பிரதேசம் | ஆங்கிலம், இந்தி, உருது |
| உத்ரகண்ட் | ஆங்கிலம், இந்தி, உருது |
| மேற்கு வங்காளம் | ஆங்கிலம், இந்தி, வங்காளம், நேபாளி, உருது |

**குறிப்பு: விண்ணப்பதாரருக்குத் தம்முடைய விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டிருந்த மொழியிலேயே தேர்வுச்சிற்றேடு வழங்கப்படும்.**

## 3. தேர்வில் வரும் வினாக்கள் பற்றிய விவரம்

காலை 11·30 முதல் மதியம் 1·30 வரை உள்ள இரண்டு மணிகள் கால அளவு கொண்டதாகத் தெரிவுநிலைத் தேர்வு இருக்கும். மேலும் பல்விடை வினாக்களைக் (Objective type) கொண்ட மூன்று பிரிவுகளில் தேர்வுத்தாள் அமைந்திருக்கும். 100 மதிப்பெண்களுக்குரிய 80 வினாக்கள் அதில் இடம்பெற்றிருக்கும்.

| தேர்வு வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண்கள் | காலஅளவு (நிமிடங்களில்) |
|---|---|---|---|
| அறிவுத்திறன் தேர்வு | 40 | 50 | 60 |
| எண்கணித அறிவுத் தேர்வு | 20 | 25 | 30 |
| மொழியறிவுத் தேர்வு | 20 | 25 | 30 |
| **கூட்டு** | **80** | **100** | **2 மணி நேரம்** |

மூன்று பிரிவுகளைக் கொண்ட ஒரு தேர்வுச்சிற்றேடு ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்குக் கூடுதலாக **30** நிமிடங்கள் வழங்கப்படும்.

### 4. விடைகளைப் பதிவு செய்யும் முறை

a) விடை எழுதுவதற்கென்று OMR **(Optical Mark Recognition)** எனப்படும் தனி விடைத்தாள் ஒன்று கொடுக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அவ்விடைத்தாளில் சரியான விடைகளைத் தகுந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். மாதிரி விடைத்தாள் வடிவம் நவோதய வித்யாலய சமிதியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

b) **விடைத்தாளில் நீலம் அல்லது கருப்பு பந்துமுனைப் பேனாவை மட்டுமே பயன்படுத்தி எழுதவேண்டும்.** மேலும் மாணவர்கள் தங்களுடைய பந்துமுனைப் பேனாவைத் தாங்களே கொண்டு வருதல் வேண்டும். **பென்சிலால் தேர்வு எழுத அனுமதி இல்லை.**

c) ஒவ்வொரு வினாவிற்கும் நம்பத்தகுந்த நான்கு விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்று மட்டுமே மிகச்சரியான விடையாகும். தேர்வு எழுதுபவர் சரியானவிடையைக் கண்டுபிடித்து **விடைத்தாளில் அந்த வினா எண்ணில் இருக்கும் விடைக்குரிய எழுத்து உள்ள வட்டத்தை மையால் நிரப்ப வேண்டும்.** எடுத்துக்காட்டாக

37 ஆம் வினாவுக்குச் சரியான விடை **C** என்ற எழுத்து கொண்ட விடையாக இருந்தால் அதைப் பின்வருமாறு விடைத்தாளில் உள்ள வட்டத்தினை மையால் நிரப்ப வேண்டும்.

**37.** (A) (B) (●C) (D)

d. ஒரு முறை நிரப்பிய விடையை மாற்றி எழுதவோ, அடித்து எழுதவோ, வெண்மையான/ திருத்தும் மையைப் பயன்படுத்தி அழித்து நிரப்பவோ அனுமதி இல்லை. அவ்வாறு அளித்த விடைக்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.
e. சரியான விடை ஒவ்வொன்றுக்கும் 1.25 மதிப்பெண் வழங்கப்படும்.
f. தவறான விடைக்கு மதிப்பெண் குறைத்தல் என்பது இல்லை.

## 5. அறிவுறுத்தல்கள் மற்றும் எடுத்துக்காட்டுகள்

A. தேர்வுச் சிற்றேட்டின் முகப்புப் பக்கத்தில் தரப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களையும் ஒவ்வொரு பிரிவிலும் தரப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களையும் விடை அளிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரர் கவனமாகப் படித்தறிய வேண்டும். விண்ணப்பதாரர் அவருக்குத் தரப்பட்ட வினாத்தாள், தங்கள் விண்ணப்பத்தில் தேர்வு எழுத தேர்ந்தெடுத்த மொழியில் உள்ளதா ? என்பதைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் தேர்வை எழுதத் தொடங்குவதற்கு முன் தேர்வு நடத்துபவரிடம் கேட்டு உரிய சிற்றேட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு எழுதுபவர் தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த விருப்பமொழியில் விடைத்தாள் அமைந்துள்ளதா என்பதைச் சரிபார்த்துக்கொள்வது அவரின் பொறுப்பாகும். தேர்வு நடந்து முடிந்த பிறகு தெரிவிக்கும் எந்த வேண்டுதல்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

B. தேர்வு எழுதும் நேரம் எந்தவித இடைவேளையுமின்றி இரண்டு மணி நேரம் ஆகும். மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும் கூடுதலாக 30 நிமிடங்கள் தரப்படும்.

C. ஒவ்வொரு பிரிவிலும் உரிய மதிப்பெண்களைப் பெற்று மூன்று பிரிவுகளிலும் தேர்ச்சி பெற வேண்டியது இன்றியமையாததாகும். எனவே மாணவர்கள் தேவைக்கு அதிகமான நேரத்தை ஏதாவது ஒரு பகுதிக்குச் செலவிட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். இருப்பினும் மொத்த நேரத்தையும் அவர்களின் விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

D. ஒவ்வொரு 30 நிமிடங்களுக்குப் பிறகும் மணி அடிக்கப்படும்.
   i. தகுந்த தேர்வு நுழைவுச்சீட்டு இல்லாமல் எந்த ஒரு மாணவரும் தெரிவுநிலைத்தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்.
   ii. விண்ணப்பதாரர் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள அறையில் காலை 11·00 மணிக்குள் வந்து அமர்ந்துவிட வேண்டும். காலதாமதமாக வருபவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.
   iii. தேர்வு நேரம் முடியும் வரை விண்ணப்பதாரர் தம்முடைய அறையிலேயே அமர்ந்திருக்க வேண்டும். அதற்குமுன் அவர் தங்கள் அறையைவிட்டு வெளியில் செல்ல அனுமதி இல்லை.

## தேர்வின் இயல்பு


**பிரிவு -1: அறிவுத்திறன் தேர்வு (MAT)**

இந்தத் தேர்வு எழுத்துரு தேர்வன்று. படங்கள், வரைபடங்கள் அடிப்படையில் வினாக்கள் அமைந்திருக்கும். மாணவர்கள் தங்கள் அறிவுத்திறனை வெளிப்படுத்தும் வகையில் வினாக்கள் அமைந்திருக்கும். இப்பகுதி மேலும் பத்து சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் இடம் பெற்றிருக்கும். அவற்றுள் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி - 1 (மாறுபட்டதைக் கண்டறிதல்)

**செய்முறை:**

1 முதல் 4 வரை உள்ள வினாக்களில் A, B, C, D என்ற எழுத்துகளைக் கொண்ட நான்கு படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த நான்கு படங்களுள் மூன்று படங்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றுபட்டிருக்கும். ஒரு படம் மட்டும் அவற்றிலிருந்து வேறுபட்டிருக்கும். அந்த வேறுபட்ட படத்தை மட்டும் தெரிவு செய்ய வேண்டும்.




சரியான விடை (A)

### பகுதி - 2 (பொருத்தமான படம் கண்டறிதல்)

**செய்முறை:**

5 முதல் 8 வரை உள்ள வினாக்களில் வினாப்படம் இடப்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்புறத்தில் A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட விடைகளுக்குரிய நான்கு படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் வினாப்படத்தில் இருப்பது போன்றே இருக்கும். அந்த சரியான விடைப்படத்தினைக் கண்டுபிடிக்கவேண்டும்.




சரியான விடை (C)

### பகுதி - 3 (விடுபட்டதைக் கண்டறிந்து முடித்தல்)

**செய்முறை:**

9 முதல் 12 வரை உள்ள வினாக்களில் வினாவுக்குரிய படம் இடப்புறத்தில் தரப்பட்டுள்ளன. ஆனால் அதில் உள்ள ஒரு பகுதி தென்படாமல் இருக்கும். வலப்புறத்தில் A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட நான்கு விடைக்குரிய படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் தென்படாமல் இருக்கும் பகுதியுடன் பொருந்தும். அதைக் கண்டுபிடித்து வினாப்படத்துடன் முடித்தல் வேண்டும்.




சரியான விடை (A)

### பகுதி - 4 (தொடர் உருவம் கண்டறிதல்)

**செய்முறை:**

13 முதல் 16 வரை உள்ள வினாக்களில் மூன்று வினாவுக்குரிய படங்கள் இடப்புறத்தில் தந்து நான்காவதாக வரும் படம் வெற்றிடமாக விடப்பட்டிருக்கும். வினாவுக்குரிய படங்கள்

ஏதோ ஒரு வகையில் வரிசையாக இருப்பவையாகும். வலப்புறத்தில் A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட விடைக்குரிய நான்கு படங்கள் தரப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்று மட்டும் வினாவுக்குரிய படங்களுள் நான்காவதாக வரவேண்டிய படத்துடன் பொருந்தும். அதைக் கண்டுபிடித்து வினாவுக்குரிய படங்களின் வரிசைகளை நிறைவு செய்ய வேண்டும்.





**சரியான விடை (C)**

**பகுதி - 5 (இணையைக் கண்டறிதல்)**

**செய்முறை:**

17 முதல் 20 வரை உள்ள வினாக்களில் இரண்டு ஜோடிகளாக நான்கு வினாப்படங்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாவதாக வரும் ஜோடியில் வினாக்குறி இடப்பட்டுள்ளது. இம்முதலிரண்டு படங்களுக்கிடையே ஏதோ ஒரு தொடர்புள்ளது. இதே போன்ற தொடர்பு அடுத்த இரண்டு படங்களிலும் இருக்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள விடைக்குரிய படங்கள் நான்கில் ஒன்று வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய படமாக இருக்கும். அதைக் கண்டுபிடித்தல் வேண்டும்.





**சரியான விடை (A)**

## பகுதி - 6 {வடிவியல் உருவப்படங்களை நிரப்புதல் -(முக்கோணம், சதுரம், வட்டம்)}

**செய்முறை:**

21 முதல் 24 வரை உள்ள வினாக்கள் வடிவியல் உருவப்படங்களாக அமைந்திருக்கும். ஒரு வடிவத்தின் வெட்டப்பட்ட ஒரு பகுதி இடப்புறத்தில் வினாவுக்குரிய படமாக உள்ளது. அதன் மீதிப்பகுதி வலப்புறத்தில் தரப்பட்டிருக்கும் A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட நான்கு விடைகளுக்குரிய படங்களுள் ஏதாவது ஒன்றாக இருக்கும். அந்தப் படத்தைக் கண்டுபிடித்து வடிவத்தை முழுமையாக்க வேண்டும்.





**சரியான விடை (A)**

## பகுதி - 7 ( கண்ணாடிப் பிம்பம்)

**செய்முறை:**

25 முதல் 28 வரை உள்ள வினாக்களில் வினாவுக்குரிய படம் இடப்புறத்தில் தரப்பட்டிருக்கும். வலப்புறத்தில் A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட விடைக்குரிய நான்கு படங்கள் தரப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்று மட்டும் இடப்புறத்தில் உள்ள படத்துடன் பொருந்துகிற கண்ணாடி பிம்பமாக இருக்கும். அதைக் கண்டுபிடித்தல் வேண்டும். கண்ணாடி X Y யாகப் பிடிக்கவேண்டும்.





**சரியான விடை (D)**

## பகுதி - 8 - (துளையிட்டதைக் கண்டு பிடித்தல - மடித்தல் /பிரித்தல்)

**செய்முறை:**

29 முதல் 32 வரை உள்ள வினாக்களில் ஒரு துண்டுத்தாள் பின்வரும் வினாவுக்குரிய படங்கள் போன்று மடிக்கப்பட்டு பிறகு துளையிடப்பட்டு இடப்புறத்தில் தரப்பட்டுள்ளன. A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட விடைக்குரிய படங்கள் வலப்புறத்தில் தரப்பட்டுள்ளன. பிரித்துப் பார்த்தால் தாள் எப்படி இருக்குமோ அப்படியுள்ள விடைக்குரிய படத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.





**சரியான விடை (A)**

## பகுதி - 9 (இணைத்துப் பார்த்தல்)

**செய்முறை:**

33 முதல் 36 வரை உள்ள வினாக்களுள் வினாவிற்குரிய படம் இடப்புறத்தில் தரப்பட்டுள்ளது. A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட விடைக்குரிய படங்கள் வலப்புறத்தில் தரப்பட்டுள்ளன. வினாவுக்குரிய படத்தில் உள்ள வெட்டப்பட்டு இருக்கும் துண்டுப்பகுதிகளை ஒன்று சேர்த்தால் எத்தகைய படம் அமையுமோ அதை விடைக்குரிய படங்களில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.





**சரியான விடை (D)**

## பகுதி - 10 (மறைந்துள்ள வடிவம் கண்டறிதல்)

**செய்முறை:**

37 முதல் 40 வரை அமைந்துள்ள வினாக்களில் வினாவுக்குரிய படங்கள் இடப்புறத்தில் தரப்பட்டுள்ளன. விடைக்குரிய A, B, C, D என்னும் எழுத்துகளைக் கொண்ட நான்கு படங்கள் வலப்புறத்தில் தரப்பட்டுள்ளன. வினாவுக்குரிய படம் எந்த விடைக்குரிய படத்தில் மறைந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.




**சரியான விடை (B)**

## பிரிவு - 2 எண்கணித அறிவுத் தேர்வு

இத்தேர்வின் முக்கிய நோக்கம் மாணவரிடமுள்ள எண்கணித அடிப்படைத் திறன்களை அறிவதேயாகும். இப்பிரிவைச் சார்ந்த இருபது வினாக்களும் கீழே தரப்பட்டுள்ள 15 தலைப்புகளின் அடிப்படையிலேயே அமையும்.

1. எண்களும் எண்மான முறையினங்களும்
2. முழு எண்களின் நான்கு அடிப்படைச் செயல்கள்
3. பின்னங்களும் அவற்றின் மீதான நான்கு அடிப்படைச் செயல்கள்
4. காரணிகள் மற்றும் மடங்குகளின் குணங்கள்
5. எண்களின் மீ.சி.ம. மற்றும் மீ.பொ.வ
6. தசமங்களும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளும்.
7. பின்னங்களைத் தசமங்களாக்குதலும், தசமங்களைப் பின்னங்களாக்குதலும்
8. அளவையில் எண்களின் செயல்பாடு - நீளம், எடை, கொள்ளளவு, காலம், செலவினம் முதலியன
9. தூரம், காலம், வேகம்
10. கோவைகளைத் மதிப்பிடுதல்.
11. எண் கோவைகளைச் சுருக்குதல்
12. விழுக்காடும் அதன் பயன்பாடும்
13. இலாபமும், நட்டமும்
14. தனி வட்டி
15. சுற்றளவு, பரப்பளவு, கொள்ளளவு

<u>குறிப்பு:</u> இப்பகுதியில், தொடர்புள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் திறன் மற்றும் பயன்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும். கணிதத்தேர்வு பகுதியில் எதிர்பார்க்கப்படும் வினா வகை பற்றிய வழிகாட்டுதல்களை விண்ணப்பதாரர்களுக்குத் தரும் பொருட்டுக் கீழே சில எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு - 1 ( புரிந்துகொள்ளலை ஆய்தல்)**

1000 - இதன் பகாக்காரணி யாது?

**A.** 10 x 10 x 10 **C.** 2 x 2 x 2 x 5 x 5

**B.** 2 x 5 x 5 x 10 **D.** 2 x 2 x 2 x 5 x 5 x 5

ஒரு எண்ணைக் காரணிப்படுத்தும் போது (1) அனைத்துக் காரணிகளின் பெருக்குத்தொகை கொடுக்கப்பட்ட எண்ணுக்குச் சமமாகவும் மற்றும் (2) ஒவ்வொரு காரணியும் பகா எண்ணாக இருப்பின் அது பகாக்காரணியாகச் சொல்லப்படும். இங்கு **D** விடை மேற்கண்ட இரண்டு விதிகளையும் நிறைவு செய்கிறது. எனவே, **D விடை சரியான விடையாகும்.**

**எடுத்துக்காட்டு - 2 (புரிந்துக்கொள்ளலை ஆய்தல்)**

முதல் நான்கு ஒற்றை எண்களின் சராசரி என்ன?

**A. 5** **B. 4** **C. 5** **D. 16**

1,3,5,7 என்பன முதல் நான்கு ஒற்றைப்படை எண்களாகும். எனவே, இவற்றின் சராசரி (1+3+5+7) /4. எனவே **B தான் சரியான விடையாகும்.**

**எடுத்துக்காட்டு - 3 (பயன்படுத்தலை ஆய்தல்)**

ஒரு கி.மீ நீளமுள்ள சரக்கு ரயில் ஒன்று 3 நிமிடங்களுக்கு 1 கி.மீ என்ற வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. 2 கி.மீ நீளமுள்ள சுரங்கம் ஒன்றைக் கடப்பதற்கு அது எடுத்துக் கொண்ட நேரம் எவ்வளவு ?

A. 1 நிமிடம் C. 6 நிமிடம்

B. 3 நிமிடம் D. 9 நிமிடம்

சுரங்கம் 2 கி.மீ. நீளமும் , ரயில் 1 கி.மீ நீளமும் உள்ளன. மொத்தம் 3 கி.மீ தூரத்தை ரயில் கடக்க வேண்டும். 3 நிமிடங்களுக்கு 1 கி.மீ என்ற வேகத்தில் இந்தச் சுரங்கத்தைக் கடக்க ரயில் எடுத்துக் கொள்ளும் நேரம் 9 நிமிடங்கள் என்பதே சரியான விடையாகும். எனவே, **D என்பது சரியான விடையாகும்.**

பிரிவு - 3 : மொழியறிவுத் தேர்வு

இத்தேர்வின் முக்கிய நோக்கம் விண்ணப்பதாரரின் படித்தறியும் திறனை ஆய்வதுதான். இத்தேர்வு 4 பத்திகளைக் கொண்டது. ஒவ்வொரு பத்தியிலும் ஐந்து வினாக்கள் உள்ளன. விண்ணப்பதாரர் ஒவ்வொரு பத்தியையும் கவனமாகப் படித்து அதைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருதல் வேண்டும்.

**பின்வரும் பத்தியும் அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களும் மாதிரியாகத் தரப்பெற்றுள்ளன.**

## பத்தி

காடுகள் நமக்கு பலவகையில் பயன்படுகின்றன. அவை நமக்கு வீடு கட்ட மற்றும் மரத்தாலானப் பொருட்கள் செய்யத் தேவையான மரக்கட்டைகளைத் தருகின்றன. காடுகள் நமக்கு காகிதங்கள் தயாரிக்கவும், எரிபொருளாகப் பயன்படுத்தவும் மரங்களைத் தருகின்றன. அவை பறவைகளுக்கும் காட்டு விலங்குகளுக்கும் சின்னஞ்சிறு பூச்சிகளுக்கும் உறைவிடங்களைத் தருகின்றன. காடுகள் மழையைத் தருகின்றன. காடுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு மிகவும் இன்றியமையாதவை. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் வேண்டும் என்ற கூற்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிருபிக்கப்பட்டுள்ளது. மனிதன் தொடர்ந்து உயிர் வாழ

வேண்டுமானால் சுற்றுச்சூழலையும் அதன் வளங்களையும் அறிவுக்கூர்மையுடன் பயன்படுத்த வேண்டும்.

**1. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு -------- மிகவும் இன்றியமையாததாகும்.**

A. காடுகள் B. மனிதர்கள்

C. விலங்குகள் D. வளங்கள்

**சரியான விடை (A)**

**2. "பாதுகாத்தல்" என்ற சொல்லின் எதிர்ச்சொல் ----------**

A. சேமித்தல் B. உறைவிடம்

C. கட்டுதல் D. அழித்தல்

**சரியான விடை (D)**

**3. "அறிவுக்கூர்மை" என்ற சொல் எதற்கு நிகரான சொல் இல்லை?**

A. புத்திசாலித்தனம் B. நகைச்சுவை

C. நுண்ணறிவு D. கூர்ந்தமதியுடைய

**சரியான விடை (B)**

**4. தச்சர்கள் காடுகளைச் சார்ந்து வாழ்கிறார்கள். ஏனென்றால் காடுகள் .............**

A. எரிபொருளாக விறகுகளைத் தருகின்றன

B. காகிதம் செய்ய மரங்களைத் தருகின்றன

C. மரச்சாமான்கள் செய்ய மரக்கட்டைகளைத் தருகின்றன

D. விலங்குகள் வாழ இடம் தருகின்றன

**சரியான விடை (C)**

**5. காட்டு விலங்குகள் வாழ இடம் இல்லாமல் போகும். ____________**

A. காகித ஆலைகள் மூடப்பட்டால்

B. வீடுகள் கட்டப்பட்டால்

C. காடுகள் அழிக்கப்பட்டால்

D. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேற்கொண்டால்

**சரியான விடை (C)**

## விண்ணப்பப் படிவத்தினைப் இணையதளத்தின் வழியாகப் பதிவேற்றம் செய்ய சில முக்கியமான வழிகாட்டுதல்கள்

ஜவஹர் நவோதய வித்யாலயாவில் உள்ள 6-ஆம் வகுப்பில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தாமே வேண்டிய வழிகாட்டுதல்களைத் தரக்கூடியவை. இருந்தாலும் பின்வரும் முக்கியமான வழிகாட்டுதல்களை விண்ணப்பதாரர்களும் பெற்றோர்களும்/பாதுகாவலரும் கருத்தில்கொள்ளுதல் இன்றியமையாதது.

1. தகவல் அறிக்கையைக் கவனமாகப் படிக்கவும். விண்ணப்பப் படிவத்தினை நிரப்பும் முன் பிறப்புச் சான்றிதழ் (தகவல் அறிக்கையில் கூறியவாறு பிறந்த தேதி **01-05-2007** முதல் **30-04-2011** வரை உள்ள குறிப்பிட்ட வரம்புக்குள் இருத்தல் வேண்டும்) மற்றும் 3,4,5ஆம் வகுப்புகளில் படித்த அரசுப்பள்ளி/ அரசு நிதியுதவிப்பள்ளி/அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பள்ளி / தேசியத் திறந்தவெளிப் பள்ளிகளில் படித்ததற்கான சான்றிதழ்கள் முதலானவை உள்ளனவா என்று சரிபார்த்துக்கொள்ளவும்.
2. பொது / தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் / ஏனைய பிற்படுத்தப்பட்டோர் / மாற்றுத்திறனாளிகள் ஆகிய பிரிவுகளைப் பதிவேற்றம் செய்யத் தேவையான சான்றிதழைகளைத் தவறாமல் நிரப்பவேண்டும். வெற்றி பெற்ற பிறகு நவோதய வித்யாலயாவில் சேரும் போது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பிரிவுகளில் ஏதேனும் தவறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள். அவ்வாறே கிராமப்புற மாணவர் தகுதிச் சான்றிதழில் தவறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களும் தகுதிநீக்கம் செய்யப்படுவார்கள்.
3. (a) பிறந்த தேதியினை எண்ணாலும் எழுத்தாலும் குறிப்பிட வேண்டும். பள்ளிச்சான்றிதழ்களில் உள்ளபடி பிறந்த தேதியினைக் குறிப்பிட வேண்டும். தரப்பட்ட பிறந்த தேதி பள்ளிச்சான்றிதழோடு பொருந்தவில்லையெனில் அந்த விண்ணப்பதாரரும் தகுதிநீக்கம் செய்யப்படுவார்.

   (b) விண்ணப்பதாரர்கள் நன்றாகத் தெரிகின்ற தங்களின் அழியாத அடையாளங்களைத் தவறாமல் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடவேண்டும்.
4. ஜவகர் நவோதய தெரிவுநிலைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரரின் கையொப்பமும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பமும் தவறாமல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
5. இணையதளத்தின் வழியாக தெரிவுநிலைத்தேர்வுக்கு விண்ணப்பிக்க இறுதி நாள் **15-09-2019.**

**எச்சரிக்கை:** விண்ணப்பப்படிவம் முழுமையாக நிரப்பப்படாமலோ அல்லது தவறாகவோ நிரப்பப்பட்டிருந்தால் அந்த விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படித்த வகுப்பு, வயது, தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர்/மாற்றுத்திறனாளிகள் பிரிவுகள், கிராமப்புறம் / நகர்ப்புறம் தகுதி முதலானவை விண்ணப்பப்படிவத்தில் முறையாக நிரப்பப்பட்டுள்ளனவா? என்று உறுதி செய்துகொள்ளவேண்டும். அவற்றில் ஏதேனும் தவறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவுநிலைத்தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் விண்ணப்பதாரரது சேர்க்கை நிறுத்தப்படும். இதில் நவோதய வித்யாலயா சமிதியின் முடிவே இறுதியானது. அதற்குக் கட்டுப்பட வேண்டியதே. இது தொடர்பாக எந்தத் தகவல் தொடர்பும்

# <u>இருப்பிடச் சான்றிதழ்</u>

**தேசியத் திறந்தவெளி பள்ளியில் பயின்று நவோதயாவில் சேர விரும்பும் மாணவருக்கு மட்டும் பொருந்தும்.**

ஜவகர் நவோதயா வித்யாலயா ......................................மாவட்டம் .......................மாநிலம் அனுப்பிய கடித எண்..................................மற்றும்..............................தேதியின்படி என் மகன்/ மகள், செல்வன்/ செல்வி ........................................................................ தங்கள் பள்ளியான ஜவகர் நவோதயாவித்யாலயா .............................. மாவட்டம்...................................மாநிலம் .................................. ஆறாம் வகுப்பில் ..........................கல்வியாண்டில் சேரத் தெரிவுநிலைத்தேர்வின் வழியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

நான் ______________தேதியிலிருந்து பின்வரும் முகவரியில் வசித்து வருகிறேன்.

*** இவரது வசிப்பிடம் மாவட்டத்தில் உள்ள கிராமப்புறம்/நகர்புறத்தினைச் சார்ந்தது.**

ஊர் ______________________________

நகரம் ______________________________

மாவட்டம் ______________________________

மாநிலம் ______________________________

அஞ்சல் குறியீட்டு எண். ______________________________

மேற்கூறிய செய்திகள் அனைத்தும் உண்மை என்றும் எதையும் மறைத்து உண்மைக்குப் புறம்பாகக் தரப்படவில்லையென்றும் நான் உறுதி அளிக்கிறேன்.

பெற்றோர் கையொப்பம்
முழுப்பெயர்
முகவரி

இடம்: ............................
தேதி: ..............................

## <u>சான்றிதழ்</u>

**(இப்படிவம் வட்டாட்சியர் பதவிக்கும் குறையாத அதிகாரியால் நிரப்பப்பட்டு கையொப்பம் இடப்பட்டு நவோதயப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேரத் தேர்ச்சி பெற்ற மாணவரின் பெற்றோருக்கு அளிக்கப்பட வேண்டும் )**

திரு/திருமதி ______________________________ அவர்களின் மகன்/மகள், செல்வன்/செல்வி __________________________________அவர்கள் ஜவகர் நவோதயா வித்யாலயா _______________ மாவட்டம் _________________ பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேரத் தகுதி பெற்றமையறிந்து மேலே அவரால் தரப்பட்ட விவரங்கள் அனைத்தும் உரிய ஆவணங்களைக் கொண்டு சரிபார்க்கப்பட்டன என்றும் அவையனைத்தும் சரியானவை என்றும் சான்றளிக்கிறேன்.

*** இவரது வசிப்பிடம் .......................... மாவட்டத்தில் உள்ள கிராமப்புறம்/நகர்புறத்தினைச் சார்ந்தது**

________________________
கையொப்பம்
துணை மண்டல அலுவலர் /வட்டாட்சியர் கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்)

நாள்: ..............................

# ஜவஹர் நவோதய வித்யாலயா தெரிவுநிலைத் தேர்வு - 2020

## சான்றிதழ;

**இணையத்தின் வழி விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய இறுதி நாள் 15-09-2019**

--------------------------------------------------------------------- பள்ளியில் உள்ள 5 ஆம் வகுப்பில் படித்து வரும்
--------------------------------------------------------------------- என்னும் பெயருடைய மாணவன் / மாணவி தந்த பின்வரும் தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் அவர் ஜவகர் நவோதய வித்யாலய தெரிவுநிலைத்தேர்வு - 2020 எழுத விரும்புகிறார் என்றும் உறுதியளிக்கிறேன்.

விண்ணப்ப தாரரின் பாஸ் போர்ட் அளவு நிழற்படம் ஒட்டவும்

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரர் பெயர் (தெளிவான எழுத்துகளில்) | | |
| தந்தையார் பெயர் (தெளிவான எழுத்துகளில்) | | |
| தாயார் பெயர் (தெளிவான எழுத்துகளில்) | | |
| பாதுகாவலர் மற்றும் அவர்தம் உறவுமுறை இருந்தால் | | |
| பிறந்த தேதி | எண்களில்<br>நா / நா / மா / மா / ஆ / ஆ / ஆ / ஆ | எழுத்துகளில்<br>..............................................................................<br>.............................................................................. |
| **பால்** (உரிய இடத்தில் (√) குறி இடுக) | ஆண் / பெண் / ட்ரான்ஸ்ஜெண்டர் | **வகுப்பினர்**<br>பொது / தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் / ஏனைய பிற்படுத்தப்பட்டோர் |
| மாற்றுத்திறனாளியாக இருந்தால் சரியான பிரிவில் (√) குறி இடுக. | | **உடல் ஊனம் / கண்பார்வையற்றோர் / காது கேளாதோர்** |
| **உடல் அடையாளம்** | | |
| **இப்போது உள்ள அஞ்சல் முகவரி** | | **கைப்பேசி எண்: ---------------------- மின்னஞ்சல் :--------------------------------------** |
| **நாடு** ------------------------- | | **மதம்:** ---------------------------------------------------- |

**தேர்வு எழுதும் மொழி:** -------------------------------------------
(தகவல் குறிப்பேட்டில் தந்துள்ளபடிஒவ்வொரு மாநிலத்திலும் எந்தெந்த மொழிகளில் தேர்வு நடத்தப்படுகின்றதோ அந்த மொழிகளுள் ஒன்றின் பெயரைக் குறிப்பிடவேண்டும்)

| விவரம் | 3 ஆம் வகுப்பு | 4 ஆம் வகுப்பு | 5 ஆம் வகுப்பு |
|---|---|---|---|
| படித்த பள்ளியின் பெயர் (3,4 மற்றும் 5 ஆம் வகுப்புகள்) மற்றும் ஊர்/இடத்தின் பெயர் | | | |
| பள்ளி அமைந்திருக்கும் இடம் ( கிராமம் / நகரம்) | | | |
| பள்ளியில் சேர்ந்த மாதம் மற்றும் ஆண்டு | | | |
| தேர்ச்சி பெற்ற மாதம் மற்றும் ஆண்டு | | | |
| வட்டம் | | | |
| மாவட்டம் | | | |
| மாநிலம் | | | |

என் மகன்/மகள் படித்த/ படிக்கின்ற பள்ளி அரசின் அனுமதி பெற்ற பள்ளி என்றும் அவர் நவோதய வித்யாலய சமிதி கூறும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளார் என்றும் உறுதி அளிக்கிறேன். மாணவர் 3,4,5 ஆம் வகுப்புகளில் படிக்கும் போது ஒரே ஒரு நாள் நகர்ப்புறத்தைச் சார்ந்த பள்ளியில் படித்திருந்தாலும் அவர் நகர்ப்புறத்தைச் சார்ந்த மாணவராகவே கருதப்படுவார் என்பதையும் மேலே தரப்பட்டுள்ள தகவல்களுள் ஏதேனும் ஒன்று தவறானது என்று கண்டுபிடிக்கப்பட்டால் என் மகன் / மகள் நவோதய வித்யாலயாவில் படிக்கும் போது எந்த நேரத்திலும் அவர் பள்ளியிலிருந்து நீக்கப்படுவார் என்பதையும் நான் நன்கு அறிந்து கொண்டேன்.

| விண்ணப்பதாரரின் கையொப்பம் | பெற்றோர்/ பாதுகாவலரின் கையொப்பம் |
|---|---|
| | |

குறிப்பு: தேசியத் திறந்தவெளிப் பள்ளித்திட்டத்தில் படித்த மாணவராக இருந்தால் அவர் வசிக்கும் இடத்தைப் பொருத்து அவரது இடம் (கிராமப்புறம்/நகர்ப்புறம்) முடிவு செய்யப்படும்.

**மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பள்ளியில் கிடைக்கும் பதிவுகள்படி சரிபார்க்கப்பட்டன. அவையனைத்தும் சரியாக உள்ளன.**

**பள்ளித்தலைமையாசிரியரின் கையொப்பம்**

**நாள்: -----------------** **(முத்திரையுடன்)**